# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 7 / 2013**

திரு. பா. பாலகிருஷ்ணன்,
த/பெ. (லேட்) பால்ராஜ் நாடார்,
2/208, வலையங்குட்டை ரோடு,
மத்வராயபுரம்,
கோவை – 641 101. ... மேல்முறையீட்டாளர்.
(திரு. J.A. மெக்கனில் கனிஷ்டன் வழக்கறிஞர்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்பத்தூர் 12. . . .. எதிர்மனுதாரர்.
(திரு. எம். அப்துல் காதர், செயற்பொறியாளர் /
சீரநாயக்கன்பாளையம் மற்றும்
திரு. கே. கருணாமூர்த்தி / உதவி செயற்பொறியாளர்)

**கேட்புரை நாள்: 17–04–2013**
**ஆணை நாள்: 30–4–2013**

மத்வராயபுரம், திரு பா.பாலகிருணணன், த/பெ. (லேட்) பால்ராஜ் நாடார் அவர்களின் 24–1–2013 நாளிட்ட மேல்முறையீட்டு மனு எண்.7/2013 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட அம்மனுவின் மீது 17–4–2013 அன்று மின்குறை தீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனு, எதிர் மனுதாரரின் பதிலுரை, கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்ட ஆணை மின்குறைதீர்பாளரால் வழுங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஒரு முனை மின் இணைப்பு எண்.108–004–356 ஐ கூடுதல் மின்பளுவுடன் கூடிய மும்முனை இணைப்பாக மாற்றியமைக்க கோரி

விண்ணப்பித்துள்ளதாகவும், அந்த மின் இணைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்

மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான ஒருமுனை மின் இணைப்பு உள்ளது. அந்த மின் இணைப்பின் எண்.108–04–356 ஆகும். அவர் அந்த மின் இணைப்பை ஐஸ் தயாரிக்கும் தொழிலுக்கு பயன்படுத்துவதற்காக, விகிதப்படி மாற்றம் மற்றும் கூடுதல் மின் பளு வேண்டி விண்ணப்பித்துள்ளார். கூடுதல் மின்பளு பெறவேண்டியதினால் அதை மும்முனை இணைப்பாக மாற்றவும் வேண்டியுள்ளார். அவருக்கு விகிதப்படி (Tariff) மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், கூடுதல்பளுவுடன் கூடிய மும்முனை இணைப்பாக மாற்றம் செய்யப்படவில்லை. அவரது மின் இணைப்பிற்கு செல்லும் service வயரை மாற்றுவதற்கு, திருமதி.கே.சுப்பாத்தாள் அவர்கள் அவரது பூமி வழியாக செல்வதால் ஆட்சேபனை தெரிவித்து கோவை முதலாவது கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தடை கோரி வழக்கு தொடர்ந்துள்ளதால், அந்த மின் இணைப்பை மும்முனை மின் இணைப்பாக மாற்ற முடியவில்லை என்று எதிர்மனுதாரர் கூறியுள்ளார். கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/ வடக்கின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய ஆணையில், வாரியமும், மனுதாரரும் ஆட்சேபனையை சீர் செய்ய இயலவில்லை எனில் மாற்று வழியாக கூடுதல் மின்பளு பெற்றுக் கொள்ள மனுதாரர் சம்மதித்தால் மாற்றுவழிப் பாதையில் மதிப்பீடு திருத்தி அமைத்து உரிய கட்டணம் வசூலித்து கூடுதல் மின் இணைப்பு வழங்க உத்தரவு வழங்கியுள்ளது. அந்த தீர்வு திருப்தி இல்லை என்பதால், மேல் முறையீட்டாளர், மின் குறைதீர்ப்பாளரிடம் அந்த மன்றத்தின் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளார்.

## 3. மேல்முறையீடு செய்ய தாமதத்திற்கு மன்னிப்பு

3.1 மேல் முறையீட்டாளர், கோவை மின் பகிர்மான வட்டம்/ வடக்கு 5–9–2012 ஆணையின் மீது தாமதமாக 24–1–2013 அன்று மேல் முறையீடு செய்வதற்கு கீழ் கண்ட காரணங்களை தெரிவித்துள்ளார்.

“அவருக்கு கூடுதல் மின் இணைப்பு வழங்க ஆட்சேபம் தெரிவித்த திருமதி. கே.சுப்பாத்தாள் மற்றும் அவரது கணவர் கந்தசாமி ஆகிய இருவரும் கடந்த 22–8–2012 அன்று கோவை முதலாவது கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.1678/2012 கூடுதல் மின் இணைப்பு வழங்க தடை கோரி மனு ஒன்று பதிவு செய்து அவருக்கும், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களுக்கும் “பிரைவேட் நோட்டீஸ்” வழக்கறிஞர் மூலம் அனுப்பியிருந்தார்கள். மேலும்

அவர் வாரிய தரப்பிலிருந்து கோரப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தியுள்ளதால், அதிகாரிகள் கூடுதல் மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்வார்கள் என்றும், அதை அறிந்து பின்னர் மேல் நடிவடிக்கை எடுக்கலாம் என இருந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் வாரிய தரப்பிலிருந்து கடந்த 24/01/2013 வரை மேற்படி வழக்கில் எதிர்வாதம் (written statement) செய்யாமல் வழக்கை இழுத்தடித்த காரணத்தினால்தான், அவர் மேற்படி கூடுதல் மின் இணைப்பு தொடர்பாக காலம் கடந்து தபால் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.''

**3.2** மன்றவிதி 8ன்படி, மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்யாமல் இருந்தமைக்கு போதுமான காரணம் இருந்தது என்று மின்குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட 30 நாட்களுக்கு பிறகும் ஏற்றுக் கொள்ளலாம் என்று உள்ளது.

**3.3** மேல்முறையீட்டாளர் 3.1 பாராவில் கூறியுள்ள காரணங்களால் மேற்கண்ட மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட கால தாமதம் மன்னிக்கப்பட்டு மேல் முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**4. <u>மேல் முறையீட்டாளரின் வாதங்கள்:</u>**

மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்:

(i) அவருடைய மின் இணைப்பை சிறுதொழிலுக்கான (ஐஸ் தயாரிக்க) விகிதப்படி மற்றும் கூடுதல் மின்பளு வேண்டி கோவை மின்பகிர்மான வட்டம் வடக்கு, ஆலாந்துறை கிழக்கு மின் உதவி பொறியாளர் திரு.ரவீந்திரன் அவர்களிடம் கடந்த 21–12–2011 அன்று விண்ணப்பம் செய்துள்ளார். உதவி பொறியாளர், அதைப் பெற்றுக் கொண்டு ஒப்புதல் ஏதும் தராமல் கடந்த இரண்டு மாதங்களாக இழுத்தடித்து வந்தார். பின்னர் தனக்கு ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) லஞ்சமாக தந்தால் மட்டுமே கூடுதல் மின் இணைப்பு வழங்க இயலும் என கூறியும், இல்லையெனில் கூடுதல் மின் இணைப்பு வழங்க இயலாது எனவும் கூறி கடந்த 2–2–2012 அன்று அவரது விண்ணப்பத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார். அவருடைய மின் இணைப்பு எண்.108–004–356 ஆகும்.

(ii) பின்னர் கடந்த 20–2–2012 அன்று மீண்டும் விண்ணப்பம் செய்துள்ளார். விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டு ஒப்புதல் மட்டும் அளிக்கப்பட்டது. விண்ணப்பக் கட்டணம் ஏதும் பெறப்படவில்லை. தொடர்ந்து 21–2–2012 அன்று அவருடைய இடத்தை ஆய்வு செய்வதாக வந்து, ஒயரிங் பணி செய்து

முடிக்கவேண்டும் எனவும், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பொறியாளரிடமிருந்து சான்றிதழ் பெற்றுத் தரவேண்டும் எனவும், மேலும் வலையங்குட்டை பகுதியைச் சேர்ந்த திருமதி.கே.சுப்பாத்தாள் என்பவரின் பூமி வழியாக ஒயரிங் பணி ஏதும் செய்ய வேண்டாம் என ஆட்சேபம் தெரிவித்ததாகவும் தபால் கொடுக்கப்பட்டது.

(iii) பின்னர் கடந்த 29–2–2012 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து சான்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. இது தொடர்பாக கடந்த 22–2–2012 அன்று சீரநாயக்கன்பாளையம் செயற்பொறியாளர் அவர்களுக்கு நேரிலும், 29–2–2012 அன்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கும் தபால் கொடுக்கப்பட்டுள்ளது.

(iv) பின்னர் மூன்றுமுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் (மக்கள் குறைதீர்க்கும் மன்றம்) 14–3–2012 அன்று செயற்பொறியாளர் அவர்களுக்கும் (நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டத்தில்) தபால் கொடுக்கப்பட்டது.

(v) 11–4–2012 அன்று மாவட்ட ஆட்சியர் மனு (123–2012) மேல் நடவடிக்கை தொடர்பாக சீரநாயக்கன்பாளையம் செயற்பொறியாளர் அவர்கள், ஒரு தபால் அனுப்பியிருந்தார். அதன் நகலையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(vi) 5–5–2012 அன்று நடந்த மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றக் கூட்டத்தில் அவரது குறைகளை எடுத்துரைத்தார். அவர்கள் அடுத்த கூட்டத்திற்குள் சீரநாயக்கன்பாளையம் செயற்பொறியாளர் அவர்கள் கூடுதல் மின் இணைப்பு வழங்க தகுந்த நடவடிக்கை எடுப்பார் என தெரிவித்தார்கள்.

(vii) உதவி மின்பொறியாளர் அவர்கள் 1–8–2012 அன்று அவரது பழைய விண்ணப்பத்தை புதிதாக எழுதி தருமாறு கூறி ரூ.50/– பெற்றுக் கொண்டு விண்ணப்பத்தை பதிவு செய்தார்.

(viii) 2–8–2012 அன்று உதவி மின்பொறியாளர் அவர்கள் கூடுதல் மின் இணைப்புக்கான காப்புத்தொகை செலுத்துமாறு கடிதம் கொடுத்தார்கள்.

(ix) அதன்படி 7.8.2012 ஆம் தேதியன்று ரூ.8,695/– ரசீது எண் முறையே 0522622 மற்றும் 0522623 படி காப்புத்தொகையை செலுத்தியுள்ளார்.

(x) 13.8.2012 அன்று மும்முனை மின் மீட்டர் வாங்கி வருமாறு உதவி மின்பொறியாளர் அவர்கள் வாய்மொழியாக கூறினார்கள். அதுவும் அன்றே

வாங்கிக் கொடுக்கப்பட்டது. ஆனால் மீட்டர் பெற்றதற்கான ஒப்புதல் சீட்டு ஏதும் நாளதுதேதி வரை தரப்படவில்லை.

(xi) 14.8.2012 அன்று கூடுதல் மின் இணைப்பு கொடுக்க வந்தபோது திருமதி.கே.சுப்பாத்தாளின் கணவர் கந்தசாமி மற்றும் மகன் செல்வகுமார் இருவரும் அவர்கள் பூமி வழியாக கூடுதல் மின் இணைப்பு வழங்கக்கூடாது என கூறினார்கள்.

(xii) உதவி மின்பொறியாளர் அவர்கள் காருண்யா நகர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் பாதுகாப்பு கேட்டு மனு கொடுத்ததாகவும், அவர்கள் பணிநிமித்தம் காரணமாக 21.8.2012 க்கு பின்னர் வருவதாகவும் கூறினார்கள். அதே போல் திருமதி கே.சுப்பாத்தாள் அவர்களுக்கு, நீங்கள் ஆட்சேபம் தெரிவிப்பது மின்வாரிய விதிமுறைகளுக்கு புறம்பானது எனவும் உங்கள் ஆட்சேபம் ஏற்புடையது அல்ல எனவும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது எனவும் கூறினார்கள்.

(xiii) அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் 22.8.2012 அன்று O.S.No.1678/2012 என்ற வழக்கு கோவை முதலாவது கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தடை கோரி அவருக்கும், உதவி பொறியாளர், உதவி மின் செயற்பொறியாளர் மற்றும் மின் செயற்பொறியாளர் அவர்களுக்கும் ''பிரைவேட் நோட்டீஸ்'' வழக்கறிஞர் மூலம் திருமதி கே.சுப்பாத்தாள் மற்றும் அவரது கணவர் கந்தசாமி இருவரும் ஒரு வழக்கு பதிவு செய்துள்ளார்கள்.

(xiv) 18.8.2012 அன்று மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் இரண்டாவது கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்தில் செயற்பொறியாளர் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் அவரிடம் வருகைப் பதிவேடு எனக்கூறி ஒரு நோட்டில் கையெழுத்து பெற்றுக் கொண்டனர். பின்னர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அவர் மாற்றுவழியில் கூடுதல் மின் இணைப்பு பெற இசைவு ஏதும் தெரிவிக்கவில்லை. மாறாக தலைவர் (மேற்பார்வை பொறியாளர்) அவர்கள், ''நீங்கள் இப்பிரச்சனையை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்'' எனக் கூறி கூட்டத்தை முடித்துவிட்டார்கள். ஆனால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தலைவர் அவர்கள், தமது தீர்ப்புரையில் மேல்முறையீட்டாளர் இசைவு தெரிவித்ததாக 5.9.2012 அன்று தபால் வந்துள்ளது.

(xv) சட்டத்திற்குப் புறம்பான முறையற்ற வகையில் அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பித்தது செல்லாது எனவும் அது அவரை கட்டுப்படுத்தாது எனவும் இதன் மூலம் தெரிவித்துள்ளார்.

(xvi) விகிதப்படி மாற்றம் செய்து தொழில் ஏதும் செய்யாமல் Tariff IIIA(1) க்கான கூடுதல் மின் கட்டணத் தொகையை **1.8.2012** லிருந்து தொடர்ந்து செலுத்தி வருகின்றார். லஞ்சம் கொடுக்காத ஒரே காரணத்திற்காக அனைத்து அதிகாரிகளும் அவரை பல வழிகளில் கூடுதல் மின் இணைப்பு பெற இயலாத வகையில் செயல்பட்டு வருவது இதன் மூலம் தெள்ளத் தெளிவாகிறது.

(xvii) மேலும் கடந்த **22.8.2012** அன்று பதிவு செய்யப்பட்ட வழக்கு O.S.No.1678/2012 க்கு இதுநாள் வரையிலும் மின்வாரிய தரப்பிலிருந்து "எதிர்வாதம்" (written statement) ஏதும் செய்யாமல் நாட்களை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**5. <u>எதிர்மனுதாரரின் வாதங்கள் :</u>**

எதிர் மனுதாரர் தன்னுடைய பதிலுரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்:

(i) மனுதாரர் திரு.பா. பாலகிருஷ்ணன் வீட்டு உபயோக மின் இணைப்பு எண். **108–004–356** பெற்றுள்ளார். இம்மின் இணைப்பு ஆலாந்துறை கிழக்கு பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்டதாகும். மேற்படி மின் இணைப்பு உள்ள இருப்பிடத்தில் "ஆரஞ்சு கேண்டி" வகை குச்சி ஐஸ்கீரிம் தயாரிப்பிற்கு என தற்போதுள்ள ஒருமுனை வீட்டு உபயோக மின் இணைப்பை **8** HP + **900** வாட்ஸ் கூடுதல் மின் பளுவுடன் கூடிய மும்முனை இணைப்பாக மாற்றி வழங்க **20.2.2012** அன்று பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்தார். அதற்கான ஒப்புகை விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டது.

(ii) மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது **21.02.2012** அன்று நடவடிக்கை மேற்கொண்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மனுதாரர் கீழ்க்கண்டவாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

1. மின்பகிர்மான விதி தொகுப்பின் பிரிவு–**6** ன் விதி **30(1)** ன்படி (clause 30(1) under chapter 6) மின் சாதனங்கள், மின் கம்பி இணைப்புகளை மனுதாரர் தன்பொறுப்பில் முறையாக செய்யவேண்டும்.

2. ஆரஞ்சு கேண்டி ஐஸ் வகை தயாரிப்பு என்பதனால் மாசு கட்டுப்பாட்டு வாரிய அனுமதி.

3. தற்போதுள்ள ஒரு முனை மின் கம்பிதடம் (single phase line) திருமதி. சுப்பாத்தாள் என்பவரது நிலத்தின் மீது அமைந்துள்ளதனால் மேற்படி நபர் கள ஆய்வின்போது வாய்மொழி ஆட்சேபணை தெரிவித்துள்ளதனால், தேவைப்படின் ஆட்சேபனையினை விலக்கிக் கொண்டதற்கான கடிதம் தரப்படவேண்டும்.

(iii) இதை தொடர்ந்து மனுதாரர் நாள் குறிப்பிடாத மனுமூலம் கோவை மின் பகிர்மான வட்டம்/வடக்கு குறை தீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்தார். அந்த முறையீட்டு மனு 25/2011–12 நாள் 1.3.2012 ஆக பதிவு செய்யப்பட்டது.

(iv) திருமதி.சுப்பத்தாள் என்பவர் மும்முனை மாறுதலுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதனால் ஆட்சேபணையினை நீக்கியதற்கான கடிதம் பெற்றுத்தர கோரப்பட்டுள்ளது. மும்முனை கம்பித்தட மாற்றம் செய்யப்பட உள்ள மின் கம்பம் 10 ஆண்டுகளுக்கு மேலாக தற்போது உள்ள இடத்தில்தான் உள்ளது. எனவே ஆட்சேபனை இல்லை என்னும் கடிதம் பெற்றுத்தர கோருவது தேவையற்றதும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. எனவே மன்றம் இவைகளை கருத்தில் கொண்டு குறையினை தீர்த்து வைக்கவேண்டும் என தனது மனுவில் கோரியிருந்தார்.

(v) மேற்காண் அவரது மனுவில் மனுதாரர் 21.12.2011 அன்றே விண்ணப்பம் அளித்ததாகவோ அப்போதைய இளமின் பொறியாளரால் கையூட்டு கோரப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

(vi) திருமதி. சுப்பாத்தாள் மீண்டும் தனது ஆட்சேபணையை கூறியதினால் மனுதாரருக்கு 3.4.2012 நாளைய கடிதம் மூலம் கீழ்கண்டவாறு அறிவிக்கப்பட்டார். மும்முனை கம்பி மாற்றம் செய்யப்படவேண்டிய மின்கம்பம் திருமதி. சுப்பாத்தம்மாள் நிலத்தில் உள்ளது. அவர் இம்மின் கம்பத்தில் எவ்வித மாறுதலும், வேறு பணிகளும் மேற்கொள்ள கூடாதென கடும் ஆட்சேபணை தெரிவித்து வருகிறார் எனவே, மின் பகிர்மான விதித்தொகுப்பு 27(6)இன்படி மும்முனை மின்கம்பி மாற்றம் செய்து மின்னிணைப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஆட்சேபணையினை

விலக்கிக் கொண்டதற்கான கடிதத்தினை பெற்று வழங்கவேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.

(vii) மனுதாரரின் குறைதீர்வு மனுவினை மன்றம் 5.5.2012 அன்றைய அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

(viii) அந்த அமர்வில் மனுதாரர் தனது கோரிக்கையான மும்முனை மாற்றம் மற்றும் கூடுதல் பளுவுடன் கூடிய தொழிற்சாலை மின்னிணைப்பினை வலியுறுத்தினார். உரிமம்தாரர் தரப்பில், மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்றும் ஆனால் ஆட்சேபனை எழுப்பப்பட்டு வருவதனால் பணிகளை முன்னெடுத்துச் செய்வதற்கு இயலாமல் உள்ளதென தெரிவிக்கப்பட்டது. உறுப்பினர் திரு. பிரதீப்குமார் அவர்கள் மினனிணைப்பு கொடுக்க முயற்சி செய்திருக்க வேண்டும் என பதிவு செய்தனர். மன்றம் தனது தீர்ப்பில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயற்பொறியாளர் தக்க நடவடிக்கை எடுத்து அடுத்த மன்ற கூட்டத்தில் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது.

(ix) இதை தொடர்ந்து 2.6.2012 மற்றும் 18.7.2012 ஆகிய நாட்களில் செயற்பொறியாளர் சீரநாயக்கன்பாளையம், உதவி செயற்பொறியாளர், மாதம்பட்டி மற்றும் உதவி பொறியாளர் ஆலந்துறை கிழக்கு அவர்களால் மும்முனை கம்பி மாறுதல் தொடர்பான பணிகளை மேற்கொள்ள முயற்சி செய்தனர். அப்போது திருமதி. சுப்பாத்தாள் அவரது மகன் மற்றும் கணவர் ஆகியோர் கடுமையாக ஆட்சேபித்ததால் பணிகள் தடைப்பட்டன. மேற்படி சுப்பத்தாள் இது தொடர்பாக 2.8.2012 அன்று எழுத்துபூர்வ ஆட்சேபனையும் கொடுத்தார்.

(x) மின்கம்பமும், கம்பி தடங்களும் ஆட்சேபணையாளரது நிலத்தின் மீது இருப்பினும் அவை உரிமம்தாரரின் சொத்துக்கள் என்றும் அவைகளில் பணி செய்ய விடாமல் தடுப்பது தவறு என்றும் மேற்படி திருமதி. சுப்பாத்தாள் அவர்களிடம் 14.8.2012 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும் பணிகளை மேற்கொள்ள காவல் துறையினர் உதவி கோரி 14.8.2012 அன்றே காருண்யா நகர் காவல் துறை அலுவலகத்திலும் கடிதம் கொடுக்கப்பட்டது.

(xi) மின்சார குறை தீர்வு மன்றம் தனது **5.5.2012** நாளைய அமர்வினை தொடர்ந்து **18.8.2012** அன்று மீண்டும் மேற்படி மனுதாரரின் கோரிக்கை மீது தனது விசாரணையை தொடர்ந்தது.

(xii) மனுதாரருக்கு மும்முனை மின்னிணைப்பு கூடுதல் பளுவுடன் தர மாற்றுப்பாதை உள்ளதா என மன்றத்தால் கேட்கப்பட்டது. அதற்கு மனுதாரர் மாற்றுப்பாதை பொதுத்தடம் உள்ளதென தெரிவித்ததை உரிமம்தாரரிடம் உறுதி செய்தபின் மன்றத்தின் முன் மனுதாரர் மாற்றுப்பாதையில் மும்முனை மாற்றத்துடன் இணைந்த கூடுதல் பளு தொழிற்சாலை மின்னிணைப்பு பெற்றுக்கொள்ள தனது இசைவினை தெரிவித்தார்.

(xiii) உரிமம்தாரரும் மாற்றுப்பாதையில் மனுதாரர் கோரியபடி மின்னிணைப்பு தர இயலும் எனவும், அதற்கு கூடுதலாக சுமார் ரூ.**40,000/–** வரை மதிப்பீடு தொகை மனுதாரரால் செலுத்தப்படவேண்டியதாக இருக்கும் எனவும், அவ்வாறு கூடுதல் மதிப்பீடு தொகை செலுத்த இசைந்து தொகையினை செலுத்தும் பட்சம் மின்னிணைப்பு வழங்க இயலும் எனவும் எடுத்துரைக்கப்பட்டதின் அடிப்படையில் மன்றம் கீழ்கண்ட தீர்ப்பினை வழங்கியது.

'' மின்கம்பிகளை மும்முனையாக மாற்றி கூடுதல் பளுவுடன் தொழிற்சாலை மின்னிணைப்பு வழங்க ஆட்சேபனை உள்ளதனால் இயலவில்லை. எனவே, மனுதாரரும், உரிமம்தாரரும், ஆட்சேபனையை நீக்கி சுமூகத் தீர்வை பெற்று மின்னிணைப்பு பெற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் . அவ்வாறு ஆட்சேபனையை நீக்க இயலாதெனில் மாற்றுப்பாதையில் கூடுதல் மதிப்பீடு தொகை வசூலித்து மின்னிணைப்பு வழங்கலாம்''

(xiv) இந்த கூட்டத்தில் கலந்து கொண்டமைக்காக மனுதாரரிடம் கையொப்பம் பெறப்பட்டது மேற்காண் மன்ற தீர்ப்பினை ஏற்று கொண்ட மனுதாரர் இதுவரை மற்றுப்பாதையில் மும்முனை மின்கம்பிகள் அமைத்து தொழிற்சாலை மின்னிணைப்பு பெற இசைவு கடிதமோ, கூடுதல் மதிப்பீட்டுத் தொகை செலுத்துவதற்கான ஒப்புதலையோ தெரிவிக்காததன் பொருட்டே இதுவரையில் மின்னிணைப்பு வழங்க இயலாமல் உள்ளது என பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(xv) தற்போது ஆட்சேபனையாளர் திருமதி சுப்பாத்தாள் தனது நிலத்தில் உள்ள மின்கம்பத்தில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ளக்கூடாதென அசல்

வழக்கு எண்.1678/12 யை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது தொடர்பான அறிவிக்கையினையும் உரிமம்தாரருக்கு அனுப்பி வைத்துள்ளார். கூடுதல் மின்பளு வழங்க ஆட்சேபனையை விலக்கி கொள்ளப்படும் என எதிர்நோக்கி தொடர் நடவடிக்கையாக வீட்டு மின்னிணைப்பு வீதப்பட்டியலிருந்து கூடுதல் மின்பளு மனுதரரர் கோரியவாறு வழங்க ஏதுவாக தொடர் நடவடிக்கையாக வீதப்பட்டியல் தொழிற்சாலை IIIA1 வீதப்பட்டியலில் மாற்றப்பட்டது.

(xvi) திருமதி. சுப்பாத்தாள் தனது மனுவில் உதவி மின்பொறியாளர் ஆலாந்துறை கிழக்கு அவர்கள், அவரது ஆட்சேபனையையும், எதிர்த்து மும்முனை கம்பிதட மாற்றுப்பணிகளை முன்னெடுத்து செய்யப்போவதாக கூறியுள்ளார் என பதிவு செய்துள்ளார். எனவே, இந்த கூற்று ஒன்றே உரிமம்தாரர் மின்னிணைப்பிற்கான பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர் என்பதற்கு சான்று. மேலும், மனுதாரர் குற்றம் சாட்டியபடி மேற்படி ஆட்சேபனை செய்வோருடன் சேர்ந்து உரிமம்தாரரும் கூட்டாக மின்னிணைப்பு தர தடை செய்கின்றனர் என்ற மனுதாரரின் கூற்றும் மேற்கண்ட ஆட்சேபனையாளரின் மனுவின்படி தவறு என்பதும் உறுதியாகின்றது.

(xvii) இந்த அசல் மனுவினை எதிர்த்து உரிய எதிர்மனு ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கைகள் உரிய காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(xviii) ஆரம்ப கட்ட பணிகளை மேற்கொண்ட காலங்களிலிருந்து ஆட்சேபணை தொடர்வதால் மும்முனை மாறுதல் தற்போதுள்ள மின் கம்பம் மற்றும் மின் கம்பிகள் வழியாக மேற்கொள்ள இயலவில்லை.

(xix) ஆட்சேபனையை மனுதாரர் மின் பகிர்மான தொகுப்பு விதி 27(6)இன்படி விலக்கி தரவேண்டும். ஆனால் இதுவரை அவ்வாறு விலக்கி தரப்படவில்லை.

(xx) மனுதாரர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மட்டுமே மன்ற உறுப்பினர்கள் மற்றும் மனுதாரரால் அவரது உதவிக்காக அழைத்து வரப்பட்ட திரு. பீரதீப்குமார் அவர்கள் முன்னிலையில் படித்து காண்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன. மனுதாரர் தெரிவிக்காத கருத்துக்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

(xxi) மனுதாரர் கோரியவாறு வீட்டு வீதப்படியிலிருந்து தொழிற்சாலை வீதப்பட்டி IIIA1 க்கு மாற்றம் செய்து தரப்பட்டது. அதன்படிதான் மனுதாரர் மின்கட்டணம் செலுத்தி வருகிறார்.

(xxii) இம்மேல்முறையீட்டாளர் கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வழக்கு எண்.CC 94/2013 மூலம் தொடுத்துள்ள வழக்கு 15.4.2013 அன்று விசாரணைக்கு வந்து மேற்படி விசாரணை 2.5.2013 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u> :**

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர் மனுதாரர் இருவரும் தங்களுடைய வாதங்களை நேரிடையாக எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.4.2013 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

**7. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

71 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. ஜெ. ஏ. மெக்கனில் கனிஸ்டன், வழக்கறிஞர் அவர்கள் கலந்து கொண்டு அவர் தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார். அவரும் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை வலியுறுத்தி வாதாடினார்.

7.2 மேலும், திருமதி. சுப்பாத்தாள் தனது நிலத்திலுள்ள மின்கம்பத்தில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ளக்கூடாதென அசல் வழக்கு எண்.1678/2012 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை தெரிவித்தார். மேலும், அந்த வழக்கில் தடையுத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

7.3 மேலும், மேல்முறையீட்டாளர் இந்த நுதல் பொருள் சம்பந்தமாக கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

7.4 திரு. என். அப்துல் காதர், செயற்பொறியாளர் அவர்கள் எதிர் மனுதாரர் சார்பில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவரும், எதிர்மனுதாரரின் பதிலுரையில் உள்ள வாதங்களையே வலியுறுத்தினார். மேலும், மாற்றுபாதையில் மின்னிணைப்பு பெறுவதற்கு மேல்முறையீட்டாளர் சம்மதம் தெரிவித்தால், மாற்றுப்பாதையில் மின்னிணைப்பு வழங்க தான் தயார் என்றும், அத்தகைய நேர்வில் கூடுதல் மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார்.

7.5 செயற்பொறியாளரும், மேல்முறையீட்டாளர், கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாக கூறினார். மேலும், அந்த வழக்கு எண்.CC 94/2013 என்றும் அந்த வழக்கு 15.4.2013 அன்று விசாரணைக்கு வந்து மேற்படி விசாரணை 2.5.2013 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்ற தகவலையும் தெரிவித்தார். மேலும், திருமதி. சுப்பாத்தாள் தொடர்ந்துள்ள அசல் வழக்கு எண்.1678/2012க்கு எதிர்மனு தாக்கல் செய்வதற்கு அரசு வழக்கறிஞரிடம் எதிர்மனு கொடுக்கப்பட்டடுள்ளது என்ற தகவலையும் தெரிவித்து, இந்த நுதல் பொருள் சம்பந்தமாக இரண்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் தெரிவித்தார்.

7.6 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும், மேல்முறையீட்டளாரின் கோரிக்கை சம்பந்தமாக வழக்குகள் நிலுவையிலுள்ளன என்பதை தெரிவித்ததால், இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியுமா என்பதை முதற்கண் தீர்வு செய்யப்படவேண்டியுள்ளது.

7.7 எனவே, இது சம்பந்தமாக, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகளில் மின்குறைதீர்ப்பாளரால் விசாரணைக்கு ஏற்கப்படும் முறையீடுகள் பற்றிய விதி 17(4) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(4) கீழ்கண்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும் மின் குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமம்தாரர், குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த இரண்டு மாதங்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே*

*கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.”*

**7.8** மேற்கண்ட விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளரிடம் அளிக்கப்பட்ட முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலிருந்தாலோ, அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியுள்ள புகாராக இருந்தாலோ அவ்வாறான முறையீட்டை, மின்குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

**7.9** தனது நிலத்தில் உள்ள மின்கம்பத்தில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளக்கூடாது என்று திருமதி. சுப்பாத்தாள் தொடர்ந்துள்ள அசல் வழக்கு எண்.1678/2012 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்றும், மேலும் இந்த மேல்முறையீட்டாளர் இந்த வழக்கிலுள்ள பொருள் சம்பந்தமாக கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வழக்கு எண்.CC 94/2013 மூலம் தொடுத்துள்ள வழக்கும் நிலுவையிலுள்ளது என்பதை மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, மின்குறைதீர்ப்பாளரிடம் அளிக்கப்பட்ட புகாரின் நுதல் பொருள் சம்பந்தமான வழக்குகள் நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலுள்ளன என்று தெரிகிறது. எனவே, இந்த வழக்கை மின்குறைதீர்ப்பாளர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளமுடியாது என்று தெரிகிறது.

**8. <u>முடிவுரை</u>**

**8.1** மன்றவிதி 17 (4) (ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளரிடம் அளிக்கப்பட்ட முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்தால் அத்தகைய முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெளிவாக உரைக்கப்பட்டிருப்பதாலும் மேல்முறையீட்டு மனுவிலுள்ள கோரிக்கை சம்பந்தமாக கோவை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திருமதி. சுப்பாத்தாள் தொடர்ந்த அசல் வழக்கு எண். 1678 / 2012 நிலுவையில் உள்ளது என்பதாலும், மேலும், மேல்முறையீட்டாளர், கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு எண். CC . 94 / 2013ம் நிலுவையில் உள்ளது என்பதாலும் மேற்கண்ட மேல்முறையீட்டு எண். 7 /2013 ஐ விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. பா. பாலகிருஷ்ணன்,
த/பெ. (லேட்) பால்ராஜ் நாடார்,
2/208, வலையங்குட்டை ரோடு,
மத்வராயபுரம்,
கோவை – 641 101.

2) மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்பத்தூர் – 12

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/வடக்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்பத்தூர் – 12

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.